இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112


# பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

# International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!


மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019

Vol. 5 Issue : 18 August 2019








ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சீ.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

# உள்ளே ...

## தமிழ்ச் செவ்வியல்

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் 'இளிவரல்' மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

## பக்தி இலக்கியம்

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் 'கனவு' பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

## ADVISORY TEAM

*Dr.S.V.Shanmugam (Chidambaram)*
*Dr.S.Rajaram (Nagarkovil)*
*Dr.Silambu.N.Selvarasu (Pondichery)*
*Dr.N.Veluchamy (Salem)*
*Sri S.SriKantharasa (Australia)*

## Editorial Team

*Dr.A.Mani (Pondichery)*
*Dr.G.Balaji (Coimbatore)*
*Dr.R.Gunaseelan (Coimbatore)*
*Dr.N.Rajendran (Coimbatore)*
*Dr.R.Raja (Trichy)*
*Dr.B.Sivamaruthi (Thailand)*
*Dr.S.Muthuselvam (Madurai)*
*Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)*
*Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)*

**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
**Expressional Strategies on Cipher Discourse**
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
**Question Structure of Periyavachan Pillai Commentary**
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

**தற்கால இலக்கியம்**

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
**The mother is the epitome of this (Imayam)**
மு.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
**Multiculturalism, psychoanalysis (background and application)**
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
**Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)**
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
**Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition**
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
**(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)**
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137

•••

மதிப்பிடப்பெற்றது

# பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு



## Question Structure of Periyavachan Pillai Commentary

வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan[13]

**Abstract:** Question and Answer strategy is there in commentary writings. This strategy appears in the initial stage commenter onwards. In that way the Question and Answer strategy is available in the commentary of Periyavaachan Pillai who wrote full commentary for the vaishanava text Naalaayira Thivya Brapandham. We can find this strategy through the commentary of Thiruvaaciriam and Periya Thiruvanthaathi. Periyavaachan Pillai has used the question types in his commentary which was mention in 13th century Tamil Grammer Nanool. Three type of question are appears in his commentary known as, known question, unknown question, doubtful question. This is good to trace the strategy of Question and Answer in devotional commentary. Because, it is wonder that the using of question and answer strategy for simplifying the unknown things which are difficult to understand. In his commentary we can find that somewhere question-answer method and somewhere only question method this method is to understand the things readers them self. This is best skill of Periyavaachan Pillai. That is why he is called king of commentary. This article tries to justify the above quotation.

**Date of submission: 2019-06-19**
**Date of acceptance: 2019-07-24**
**Date of Publication: 2019-08-05**
**Corresponding author's**
**Name:** வ.கோபாலகிருஷ்ணன்
**Email:** rasaigopi@gmail.com

**Keywords:** Types of Question, Known Question, Unknown Question, Doubtful Question, V.Gopalakrishnan, வினா வகை, அறிவினா, அறியாவினா, ஐயவினா, வ.கோபாலகிருஷ்ணன்.

### முன்னுரை

இலக்கண மற்றும் இலக்கிய உரையாசிரியர்கள் போல வைணவ உரையாசிரியர் பெரியவாச்சான்பிள்ளையும் ஈடு இணையற்றவராகத் திகழ்கின்றார். இவர் தன்னுடை உரையில் ஒரு கருத்தினை ஆழப்பதிய வைப்பதற்காகச் சொல்நயம், பொருள் நயம், மேற்கோள்களைக் கையாளுதல், உவமையைப் பயன்படுத்துதல், சிற்றிலக்கிய வகைமைகளைப் போற்றுதல், புராணக் கூறுகளை இடையிடையே புகுத்துதல் போன்ற எண்ணிறந்த உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் வினா அமைப்பும் ஒன்று. தன் உரை விளக்கத்திற்கு மேலும் மெருகேற்ற வேண்டும் என்ற நோக்கில் வினா

[13] தமிழ் உதவிப்பேராசிரியர், எம்.ஜி.ஆர் கல்லூரி, ஒசூர் – 635130, கைபேசி : 9488181733, மின்னஞ்சல்: rasaigopi@gmail.com

அமைப்பினைக் கையாண்டுள்ளார். அவர் கையாண்டுள்ள அவ்வினா அமைப்புமுறையின் நெறிமுறைகளை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**வினா வகை**

வினா வகைக் குறித்து நன்னூலில்,
"அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்"[1]

எனக் கூறப்பட்டுள்ளது. இதில் அறிவினா, அறியாவினா, ஐயவினா எனும் மூவகை வினாவிற்குள் பெரியவாச்சான்பிள்ளையின் திருவாசிரியம், பெரியதிருவந்தாதி ஆகிய உரையினை அடக்கலாம்.

**அறிவினா**

தான் ஒருபொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும் பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா ஆகும். இவ்வினா வகையைத் திருவாசிரியம்(5) பாசுரத்தில் திருமாலின் வாமனவதாரத்தைக் குறிப்பிட்டு உரையெழுதும்போது பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

திருமால் குள்ளமான வடிவத்தோடு வருகின்றபோது அவருடைய மேன்மையை எவரும் அறியாமல் இருக்கின்றனர். இவ்வவதாரம் ஒருவருக்காக மட்டும் எடுக்காமல் உலக மக்களின் நன்மைக்காக எடுத்த அவதாரமாகும். இச்சூழ்நிலையில்தான் திருமால் விண்ணுயர வளர்ந்து நிற்பார். அப்போது அவருடைய திருவடியானது தாமரைப்பூப் போன்று விளங்குவதைக் குறித்து உரையாசிரியர் அறிவினாத் தன்மையில் விளக்கம் அளிப்பதைக் காணலாம். 'திருவடியாகிற அன்றலர்ந்த பூவை என்ன செய்தான்?' எனும் வினாவிற்கான விடையை உரையாசிரியர் மிகத்தெளிவாக அறிந்திருக்கிறார் என்பதை அடுத்ததாகக் கேட்கின்ற வினாவினை வைத்து நன்கறியலாம். 'திருவடியின் கீழே பட்ட பொருள்கள் துன்படையவில்லையோ?' எனத் தொடுக்கின்றார். அதாவது, புதியதாக மலர்ந்த தாமரைப்பூவின் இதழ்களை விரித்துத் தரையில் தலைகீழாகக் கவிழ்த்து வைத்தால் அதற்குள் இருக்கும் மகரந்தங்கள் எத்தகைய துன்பத்தையும் அடையாமலிருக்கும். அதுபோல திருமாலின் வாமனவதாரத்தின்போது அவருடைய பாதத்திற்குக் கீழே உள்ள மானிடர் முதல் பொருட்கள் வரை பாதுகாப்பாக இருந்ததைப் பெரியவாச்சான்பிள்ளை தன் உரை வாயிலாக விளக்குகிறார். இதனை, "திருவடியாகிற அன்றலர்ந்த பூவை என்ன செய்தான்? எனில் 'திருவடியை வியாபிக்கச் செய்து எல்லாவற்றையும் அளந்துகொள்ளும்போது சிறிய பொருள்களின் மேலே பெரியபொருளான திருவடி அழுத்தினால் அச்சிறிய பொருள்கள் துன்பமடையும். அப்படியே திருவடியின் கீழே பட்ட பொருள்கள் துன்பமடையவில்லையோ? எனில் அன்று பூத்த தாமரைப் பூவைக் கவிழ்த்து அதன் இதழ்களை விலக்கி அலரச் செய்தால் அத்தாமரையினுள் இருக்கும் அல்லி தாது முதலானவை எப்படி நெருக்குப் படாமலிருக்குமோ அப்படியே இந்தத் திருவடித்தாமரையின் கீழ்பட்ட

பொருள்களுக்கும் எத்துன்பமும் விளையவில்லை"[2] என்று அறிவினா நோக்கில் தொடுத்து அதற்கு அனைவரும் அறிந்துகொள்ளும் விதத்தில் சீரிய விடையையும் தருவது இவருடைய உரையாற்றலைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

திருவாசிரியம்(6) பாசுரத்திற்கு உரை எழுதும்போது வினாக் கேட்டு விடையளிக்கும் விதத்தை, "நீர் இங்ஙனே ஓ! என்றிட்டு நெடுவாசிபடக் கூப்பிடுகைக்கு லோகமாகத்தான் செய்த தென்னென்னில்? இரா நின்றார்கள். உற்பத்திக்கு முன்னே உண்டாக்குகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, பின்னை கர்ப்பத்திலே தரித்து, ப்ரஸவவேதனையை அனுபவித்து அநந்தரம் தண்ணிய தரையிலே இட்டுக்கொடு துவண்டு நோக்கினால், அறிவு பிறந்து பண்ணின உபகாரத்தை ஸ்மரிக்குமளவானவாறே அவளைவிட்டு ஒரு உபகாரமும் பண்ணவுமறியாதே இவன் பண்ணின உபசாரத்தை ஸ்மரிக்கவுமறியாதே இருப்பதொரு அசித்பதார்த்தத்தைக் கொண்டாடுவாரைப் போலே, வகுத்த விஷயத்தை விட்டு அப்ராப்த விஷயத்தை ஆதரியா நின்றார்கள். நீர் ஈன்றோள் என்று தாயாக நினைக்கிறது தான் ஆரை? என்னில்; படைத்திடந்துண் டுமிழ்ந்தளந்து தேர்ந்துல களிக்கும் முதற்பெருங் கடவுள்."[3] என்று உரை எழுதியுள்ளார். இதில், இரண்டு விதமான கேள்விகளைக் கேட்கின்றார். ஒன்று, 'நீர் இப்படி ஓ என்று பெருங்குரலெடுத்துக் கதறும்படி இந்த உலகம் என்ன செய்துவிட்டது?' என்பதும், மற்றொன்று 'நீர் ஈன்றோள் என்று தாயாக நினைப்பது யாரை?' என்ற இருவிதமான வினாக்களை முன்வைக்கிறார். அதற்கும் தன் உரையினுள்ளே விடையையும் குறிப்பிட்டுள்ளார்.

நீர் இப்படி ஓ என்று பெருங்குரலெடுத்துக் கதறும்படி இந்த உலகம் என்ன செய்துவிட்டது? என்பதற்கு ஒரு தாயானவள் உன்னைப் பெற்றெடுப்பதற்கு விரதமிருந்து பத்துமாதம் தன் வயிற்றில் தாங்கியிருந்து, அதன் பின் பெற்றெடுத்து தரையில் விடாமல் மடியில்கிடத்தி ஆறறிவையும் ஊட்டி வளர்த்து ஆளாக்கிவிடுவாள். பின் அத்தாயை மதிக்காமல் இருப்பதுபோல திருமாலை விட்டுவிட்டு மற்ற தெய்வங்களை வணங்குவதை வலியுறுத்திக் கூறுவதற்காக இத்தகைய ஒரு வினாவைத்தொடுத்து வைணவ சமயத்தின் மாண்பை நிறுவிக்காட்டும் நோக்கில் விடையையும் முன்வைக்கின்றார் உரையாசிரியர்.

நீர் ஈன்றோள் என்று தாயாக நினைப்பது யாரை? என்பதற்கு நம்மாழ்வாரின் பாசுரவரியினைப் பதிலாக எடுத்துக் கூறுகின்றார். அதாவது, 'படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்து தேர்ந்துல களிக்கும் முதற்பெருங் கடவுள்' என்று திருமாலைக் குறித்து விடையும் தருகின்றார் உரையாசிரியர்.

திருவாசிரியத்தை ஒப்பிடும்போது பெரிய திருவந்தாதியில் வினாத்தொடுக்கும் இடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெரிய திருவந்தாதியின் இரண்டாம் பாசுரத்தில், "புகழ்வோம் பழிப்போம் அவ்விஷயத்தைப் புகழப் பார்த்தோமாகில் பழித்தோமாவோம். புகழோம் பழியோம் 'புகழ்வோம்' என்றதினாலே இவ்வர்த்தம் ஸித்தியாதோவென்னில்: அந்வயத்திற் காட்டில் வ்யதிரேகத்தாலே சொன்னால் அர்த்தத்துக்கு ஒரு ஸ்தைர்யமுண்டென்று சொன்னார்."[4] இதில் 'புகழ்வோம் பழிப்போம்'

என்றதனாலேயே அர்த்தம் கிடைக்காதோ? என வினாக் கேட்டு விடையும் உரைக்கிறார். அதாவது, பகவத் கீதையைப் புகழ்ந்தோமானால், உண்மையில் அதைப் பழித்தவர்களாகவே ஆகின்றோம். திருமாலைப் புகழாமலிருந்தோமானால் அதுவே அவனைப் பழிக்காமல் இருந்ததாகும் என்று விடையளித்துக் காரணத்தையும் கூறுகின்றார். பழிப்போம், புகழ்வோம் என மாற்றிக் கூறினாலும் மேற்கண்ட பதிலும் கேள்வியும் சரியாகப் பொருந்தும் என்ற காரணமும் இவ்விடத்தே வைத்து நோக்கத்தக்கதாகும். இதன் மூலம் உரையாசிரியரின் அறிவினா ஆற்றலின் தன்மையை அறிந்துகொள்ள முடிகின்றது.

திருமாலை நம்முடைய கண் எப்பொழுது, எவ்வாறு கண்டுணரும் என்பதற்குப் பெரிய திருவந்தாதி(28) பாசுரத்திற்கு எழுதிய உரை வாயிலாக அறியலாம். இதில், "ஸர்வேஸ்வரன் கறுத்த திருமேனியை நம்முடைய கண் அன்றே காணும். ஒரு நாளும் பகவத் விஷயத்தைக் காணாமையாலே 'பீலிக்கண்' என்றவோபாதி கண்ணென்று பேரான கண்ணால் காணப்போகாத அவனுடைய திருமேனியை நெஞ்சாகிற உட்கண் உணர்ந்து காணுமாகில் நம் கண் காணுமாழியான் காருருவம்."[5] எனும் உரைவாயிலாகத் திருமாலை எவ்வாறு காணவேண்டும் என்பதற்கு வினாவினை எழுப்பி, காரண காரியத்தையும் விளக்கி நிற்கின்றார். இதில் கருமை நிறத்தில் இருக்கின்ற திருமாலின் திருமேனியை நம்முடைய புறக்கண் என்று காணும்? என்றால், ஒரு நாளும் திருமாலை காணாமலிருக்கின்ற புறக்கண்ணானது மயிலின் பீலிக்கண்போலே 'கண்' பெயர்பெற்ற ஓர் உறுப்பானது காணமுடியாமல், மனம் எனும் நமது உட்கண் உணர்ந்து காணுமாகில் அன்றுதான் நம்முடைய புறக்கண் ஆழி அரசன் கருமைநிறத் திருமாலைக் காணும் என்று தகுந்த விடையளித்து அறிவினாத் தன்மையைத் தன் உரைவாயிலாக வெளிப்படுத்திச் செல்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

பெரியதிருவந்தாதி(13) பாசுரத்திற்கு உரை கூறும்போது, "நீர் அடியாராக வேணுமேயென்ன, என்பக்கலுள்ளது அழிந்ததாகிலும், உன்பக்கலுள்ளது அழியாதிரே: உன் ஸ்வாமித்வம் உண்டாக என் சேஷத்வம் தன்னடையே கிடவாதோ? நாட்டடியார்க்கு இழப்புண்டாகிலும் உன்னடியார்க்கு இழப்புண்டோ?"[6] என இரு வினாக்களை முன்வைத்து உரை எழுதிச் செல்கிறார். இதில், திருமாலை எவராலும் அழிக்க முடியாது. அப்படி உறுதியாக இருக்கின்றவனை அழிக்க முடியாதது போல் அவனை வழிபடுகின்றவர்களுக்கும் அழிவு உண்டோ? என்கிறார். மேலும், உலகில் மற்றவர்களுக்கு அடியவர்களாக இருந்தால் விரும்பிய பலனை அடைய முடியாமல் போகும். அதுபோல திருமாலிடம் அடியவர்களாக உள்ளவர்களுக்கு இழப்புகளும் உண்டோ? என்று வினாவினைத் தொடுத்து உரையின் பொருள் விளக்கத்தை எடுத்தியம்புகின்றார்.

**அறியாவினா**

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினாவுவது அறியா வினாவாகும். இவ்வினாவகை உரையாசிரியரின் உரையில்

மிகுதியான இடங்களில் விரவிக் காணப்படுகின்றது. குறிப்பாக, அறிவினா இடம்பெறும் இடங்களில் விடைகளைக் காணமுடிகிறது. இவ்வகை வினாப் பயின்று வரும் இடங்களில் விடையைக் காண இயலவில்லை. அதேசமயத்தில் அறியா வினாக்களுக்கு விடைகள் இல்லை என எண்ணுவதும் தவறாகும். இப்போக்கு பெரியவாச்சான் பிள்ளையின் வைணவப் பற்றினைப் புலப்படுத்தும் நோக்கில் அமைந்திருப்பதை அறியலாம்.

பெரிய திருவந்தாதி(12) பாசுரத்திற்கு "ஸர்வேஸ்வரனுக்கு ஐஸ்வர்யமேயன்று காண் விஞ்சியிருப்பது: நீர்மையும் விஞ்சியிருக்குங்காண் என்று நான் சொன்னாலும் அழன்று அத்தைக் கொள்ளாய். 'ஆகில் இனிச் செய்வதென்?' என்று நெஞ்சு கேட்க, அவன் அபிமுக்யம் பண்ணிநிற்க நாம் வைமுக்யம் பண்ணலாகாதுகாண்: அவன் திருவடிகளுக்கு மங்களாஸாஸநம் பண்ணுகை ந்யாயம்"[7] என்று மனம் வினாக் கேட்பதாக எழுதிச்செல்கிறார். இவ்வினா அறியாவினாவாக அமைந்தாலும், திருமால் மீது பற்றுக்கொண்டு பல்லாண்டு பாடிக்கொண்டிருந்தால் நம்முடைய சித்தம் சிறப்பாக அமையும் என்பதை மேற்கண்ட வினாவினை வைத்து நாமாகவே அறிந்து கொள்ளலாம்.

**ஐயவினா**

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒரு பொருளினைக் குறித்து ஐயத்தினைப் போக்கிக்கொள்வதற்காக வினவப்படுவதாகும். மற்ற வினாவகைகளைப் போலவே இவ்வினாவையும் உரையில் எளிமையாகக் காணமுடிகின்றது.

பெரியதிருவந்தாதி(36) பாசுரத்தில், "எம்பெருமான் திருப்பாற்கடல் நாதனாயிருந்து அணுகுவதற்கு அரியவனாய் இருப்பனோ?"[8] என வினா எழ உரை எழுதுகின்றார். அதாவது, கடல் நாயகனாக இருக்கின்ற திருமால் நான் அணுகுவதற்கு எளியவனாக இருப்பானோ? எட்டாதவனாக இருப்பானோ? என்று பாசுரத்தின் தொடக்கத்திலே வினாவினைக் கேட்டு விளக்குகின்ற தன்மையினையும் உரையாசிரியரிடம் காணமுடிகின்றது. அடுத்துவரும் பாசுரத்திற்கும் தொடக்கத்திலே வினாக் கேட்பதைக் காணலாம். இதனை, "ஆமாறு (ஆறு வழியாய்) வழியான அறிவுடையா ராவதரிதன்றே?"[9] என்பதன் மூலமாக, ஆறறிவு கொண்டவர்களைக் காண்பது மிகவும் அரிதல்லவா? என்று வினாக் கேட்டு, உலகில் அறிவுடையவர்களைக் காணமுடியவில்லையே என்கிற ஆதங்கத்தைத் தன் வினாவின் மூலம் உரையாசிரியர் வெளிக்காட்டுவதை உணர முடிகின்றது.

பெரிய திருவந்தாதி நாற்பத்து மூன்றாம் பாசுரத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட வினாக்களைத் தொடுத்து நிற்பதைக் காணலாம். இவற்றில் மட்டுமே வினாக்கள் அதிகம் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. இதனை, "அபயம் என்று நினைத்து வந்த தேவதைகளை அந்தத் துக்கத்தை நடுங்கப்பண்ணிப் போக்குமவன் தன்னை நவையென்று துக்கஹேதுவான குற்றமாகவுமாம். இவ்விஷயங்களைப் பற்றுவோமோ? ஈஸ்வரனைப் பற்றுவோமோ? அயோக்ய ரென்றகலு வோமோ? அகலாதொழி வோமோ? என்று இரண்டு மின்றிக்கேயிருக்கிற மநஸ்ஸிலே இவனை உயர வைத்து மங்களாஸாஸனம் பண்ணாதார்க்கு முண்டோ மனத்துயர் மாய்க்கும் ப்ரகாரம்?"[10] என்று மேலான வினாக்களை எழுப்பி பாசுரத்திற்கு

பொருளாழம் சேர்க்கின்றார். இவற்றில், திருமாலை மனதில் உயர்ந்த இடத்தில் வைத்து நிலையாயிருந்து பல்லாண்டு பாடாதவர்களுக்கு மனத்துன்பத்தைப் போக்குவதற்கு வழியுண்டோ? என்றும், ஈஸ்வரனைப் பற்றுவோமோ? அல்லது திருமாலிடம் சேர நமக்குத் தகுதியில்லை என்று அகல்வோமோ? அல்லது அகலாதிருப்போமோ? முதலான வினாக்களைக் கேட்டு, திருமாலின் மேன்மையினைப் பாசுரத்தில் பொருத்தி உரையினைச் சிறப்பாக்கிக் காட்டுகின்றார் பெரியவாச்சான் பிள்ளை.

### முடிவுரை

ஆழ்வார்களின் எண்ணத்தை, உள்ளதை உள்ளவாறு தன் உரையில் எடுத்துரைத்துள்ளார். இவற்றிற்கு வினாஅமைப்பு என்னும் உத்தி முறையினை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். உரையாசிரியர் தனக்கு நன்றாகத் தெரிந்த கருத்தினைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் அறிவினாவும், தான் அறியாதவற்றைத் தன் உரையாற்றல் மூலமாக பிறர் தாங்களாகவே அறிந்துகொள்ளும் நோக்கில் அறியாவினாவும், தனக்கு உண்டான ஐயத்தை வெளிப்படுத்தும் தன்மையில் ஐயவினாவும் அமைந்திருக்கும் வண்ணம் உரையெழுதியுள்ளார் எனலாம்.

### சான்றெண் விளக்கம்

a. சோம.இளவரசு, நன்னூல் – சொல்லதிகாரம், மூலமும் விளக்கவுரையும், நூற்பா 385.
b. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய வ்யாக்கியானம், ப.57.
c. மேலது, பக்.69–70.
d. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த பெரியதிருவந்தாதி வ்யாக்கியானம், ப.25.
e. மேலது, ப.108.
f. மேலது, ப.69.
g. மேலது, ப.66.
h. மேலது, ப.129.
i. மேலது, ப.132.
j. மேலது, ப.146–147.

### துணைநின்றவை


- இளவரசு,சோம.(உ.ஆ.), 2004, நன்னூல் (சொல்லதிகாரம்), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
- கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,எஸ்.(பதி.), 1947, பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய வ்யாக்யானம், ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.
- ……………(பதி.), 1947, பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த பெரியதிருவந்தாதி வ்யாக்யானம், ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.